# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 10.03.2020 | 1) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு இடையூறாக உள்ள மரங்களை அப்புறப்படுத்தும் பணிக்கு 04.03.2020 அன்று ஏலம் நடைபெற்றதில் கீழ்க்கண்டுள்ள விவரப்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளார். | 70)அலுவலகக் குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது |

| வ.எண் | மரங்களின் விவரம் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ளவர் விவரம் | மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விபரம் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | ஸ்டேட் பேங்க் காலனி முதல் சுந்தரவேல்புரம் சாலை வரை உள்ள மரங்கள் | திரு. அருண் | ரூ. 58,500.00 | ரூ. 60,500.00 |
| 2 | ஆசிரியர்காலனி மெயின்ரோடு சாலையின் வலது பக்க மரங்கள் | திரு. அருண் | ரூ.1,600.00 | ரூ.2,000.00 |
| 3 | ஆசிரியர் காலனி மெயின் ரோடு சாலையின் இடதுபக்க மரங்கள் | திரு. அருண் | ரூ.44,000.00 | ரூ.47,000.00 |
| 4 | கந்தன் காலனி சாலையின் வலதுபக்க மரங்கள் | திரு. அருண் | ரூ.16,500.00 | ரூ.17,500.00 |
| 5 | கந்தன் காலனி சாலையின் இடது பக்க மரங்கள் | திரு. தனராஜ் | ரூ.3,500.00 | ரூ.4,500.00 |
| 6 | மில்லர்புரம் சாலையின் வலது பக்கம் உள்ள மரங்கள் | திரு. அருண் | ரூ.21,000.00 | ரூ.22,300.00 |
| 7 | மில்லர்புரம் சாலையின் இடதுபக்கம் உள்ள மரங்கள் | திரு. அருண் | ரூ.42,500.00 | ரூ.45,000.00 |
| 8 | போல்டன்புரம் சாலையில் உள்ள மரங்கள் | திரு. அருண் | ரூ.18,400.00 | ரூ. 19,500.00 |
| 9 | டி.எம்.பி. காலனியில உள்ள மரங்கள் | திரு. அருண் | ரூ.4,500.00 | ரூ. 6,000.00 |
| 10 | புதுகிராமத்திலிருந்து கடல் வரை மற்றும் கீதா ஜீவன் நகர் முதல் கடல் வரை | திரு. அருண் | ரூ.45,700.00 | ரூ. 48,500.00 |

| | | |
|---|---|---|
| | மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்விதாரர்கள், ஏலக்கேள்வி தொகை விற்பனை வரி மற்றும் உபரி வரி ஆகியவற்றினை செலுத்தியுள்ளனர் எனவே மேற்படி ஏலத்தினை முடிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மேற்படி ஏலக்கேள்வி தொகைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலையைவிட கூடுதலாக உள்ளதால் வ.எண்.1 முதல் 10 வரை உள்ள உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை அங்கீகரிக்கலாம். ந.க.எண்.3143.இ5/2018 | |

| | | |
|---|---|---|
| | 2)தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட முத்தையாபுரம் பொன்நகர், மற்றும் அத்திமரப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் குடிநீர் விநியோக மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நான்காவது பைப்லைன் திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய்கள் பதிக்கப்படாமல் விடுபட்டு உள்ளபடியால் மேற்படி பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் உள்ள வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க ஏதுவாக மேற்படி பகுதியில் புதிதாக பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு ரூ. 46.40 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 71) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட முத்தையாபுரம், பொன்நகர், மற்றும் அத்திமரப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் குடிநீர் விநியோக மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நான்காவது பைப்லைன் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணி | 46.00 |
| | மொத்தம் | 46.00 |
| | எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 46.40 இலட்சத்தில் குடிநீர் நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மாநகராட்சி குடிநீர் நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். இ2/02375/19 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சிக்கான 2020–2021ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடுகள் மற்றும் 2019–2020ம் வருடத்திய திருத்திய வரவு செலவு மதிப்பீடுகள் 1) வருவாய் மற்றும் மூலதன நிதி 2) குடிநீர் மற்றும் வடிகால் நிதி 3) ஆரம்ப கல்வி நிதி ஆகிய வகைகளுக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.<br>பி1/00642/2020 | 72) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.10.03.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி